**தலைப்பு 440 – இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூலை 07 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூன் 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும்

வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சு மீளாய்வாண்டின் போது ஸ்தாபிக்கப்பட்டிருந்தமையினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவையொன்று காணப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 (வழிகாட்டியின்) 3.1 ஆம் பிரிவின் பிரகாரம் இறுதி திறைசேரி கணக்கு கூற்றுக்கள் இணைப்பாக நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படவேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டுகளில் அவ்வாறு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதி கூற்றுக்களில் இணைப்புக்களாக இறுதி திறைசேரி கணக்கு கூற்றுக்கள் உள்ளடக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அரச நிதி கூற்றிக்கை இலக்கம் 02/2020 (வழிகாட்டி) 6 இன் 7(vi) ஆம் பிரிவின் பிரகாரம் திறைசேரி மீதி மற்றும் அமைச்சின் காசேட்டின் பிரகாரம் திறைசேரிக்கு தீர்க்கப்பட வேண்டியிருந்த பெறுமதிகளுக்கு இடையே வேறுபாடுகளை சீராக்குவதற்காக கட்டுநிதி சீராக்கல் கணக்கு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | கட்டுநிதி சீராக்கல் கணக்கு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீண்டெழும் செலவினம் | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 1 மற்றும் நிகழ்ச்சித் திட்டம் 2 இன் கீழ் மீண்டெழும் செலவினத்திற்காக பாதீட்டு மதிப்பீடு செய்யப்பட்ட தேறிய நிதிஏற்பாடு ரூபா 107.65 மில்லியன் ஆக இருந்ததுடன், அதில் ரூபா 17.59 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 90.06 மில்லியன் மீண்டெழும் செலவினத்திற்கான நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அது தேறிய நிதி ஏற்பாட்டில் 83.66 சதவீதம் ஆகும். | காண்பிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை சரியானதாகும். | ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டை பயன்படுத்தி அமைச்சின் நோக்கங்களை செயற்திறனாக அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(ஆ) மூலதன செலவினம்

-----------------------------------

| | | |
|---|---|---|
| நிகழ்ச்சித் திட்டம் 1 மற்றும் 2 இன் கீழ் மூலதன செலவினத்திற்காக பாதீட்டு மதிப்பீடு செய்யப்பட்ட தேறிய நிதிஏற்பாடு ரூபா 22.00 மில்லியன் ஆக இருந்ததுடன், உள்ளபடியான செலவினம் ரூபா 9.38 மில்லியன் ஆகும். இதன் பிரகாரம் ரூபா 12.62 மில்லியன் தொகையான நிதிஏற்பாடு பயன்படுத்தப்படாதிருந்ததுடன், அது தேறிய நிதிஏற்பாட்டில் 57.36 சதவீதமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | காண்பிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை சரியானதாகும். | -மேற்படி- |

(இ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

-----------------------------------------

| | | |
|---|---|---|
| திறைசேரி குறிப்புக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியல்லா சொத்துக்களின் மீதி ரூபா 38,449 ஆக இருந்த போதிலும், அமைச்சினால் தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றில் அந்த மீதி ரூபா 80,949 ஆனமையால் ரூபா 42,499 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் திறைசேரி குறிப்புக்களுடன் அமைச்சு கணக்குகளின் பிரகாரம் மீதிகள் இணக்கம் செய்யப்பட்டு பெறுமதியை காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | திறைசேரி குறிப்புக்களுடன் கணக்குகளில் காண்பிக்கப்படுகின்ற மீதியை இணக்கம் செய்து சரியான பெறுமதியை காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

2. நிதி மீளாய்வு

-------------------------

2.1 செலவின முகாமைத்துவம்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிகழ்ச்சித் திட்டம் 1 இன் கீழ் 13 செலவின விடயங்களில் தேறிய நிதிஏற்பாடுகளின் கூட்டுமொத்தம் ரூபா 20,385,000 ஆக இருந்ததுடன், உள்ளபடியான செலவினம் கூட்டுமொத்தம் ரூபா 8,803,375 ஆக இருந்தது. அதன் பிரகாரம் சேமிப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 11,581,625 மற்றும் செலவின விடயங்களின் சேமிப்பு வீதம் 77 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. புதிய இராஜாங்க அமைச்சு 2020 ஆகஸ்ட் 13 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டிருந்தமையால் அத்திகதி முதல் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலத்திற்குரிய நிதிஏற்பாட்டை ஒதுக்குவதற்கு பதிலாக அளவினை விஞ்சி மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | புதிய அமைச்சாக 2020 ஆகஸ்ட் 09 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டு இடைக்கால கணக்குகளின் மூலம் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. மிகை நிதிஏற்பாடு ஒதுக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | மீண்டெழும் செலவின விடயத்திற்காக மிகை நிதிஏற்பாடு ஏற்படாத வகையில் சாத்தியமான மதிப்பீட்டை அடிப்படையாக் கொண்டு நிதிஏற்பாடு ஒதுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) நிகழ்ச்சித் திட்டம் 1 இன் கீழ் மூலதன சொத்துக்களை புனரமைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கான 3 செலவின விடயங்கள் மற்றும் மூலதன சொத்துக்களை கைப்பற்றுவதற்கான 2 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டின் கூட்டுமொத்தம் ரூபா 2,870,000 ஆக இருந்ததுடன், சேமிப்பு ரூபா 2,493,960 ஆகும். மேலும் நிதிஏற்பாட்டின் சேமிப்பு தேறிய நிதிஏற்பாட்டின் வீதமாக 73 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. இதன் பிரகாரம் 5 மூலதன செலவின விடயங்களில் ரூபா 2,493,960 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | புதிய அமைச்சொன்றாக ஸ்தாபிக்கும் போது நிதிஏற்பாடு குறிப்பாக மதிப்பீடு செய்ய முடியாதிருந்தமையினால் அண்ணளவான மதிப்பீட்டின் அடிப்படையில் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. நாட்டில் காணப்பட்ட ஆபத்தான சுகாதார நிலைமையின் காரணமாக இறக்குமதி நடவடிக்கைகள் மந்த கதியில் காணப்பட்டமை, பதவியணியினரின் வெற்றிடம், செலவின வரையரையின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டமை போன்றவை நிதிஏற்பாட்டின் சேமிப்பிற்கு காரணமாக இருந்தது. | மூலதன செலவின நிதிஏற்பாடுகளை குறைவாக பயன்படுத்தாத வகையில் சாத்தியமான நிதி ஏற்பாடுகளை ஒதுக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 07 செலவின விடயங்களுக்குரிய மீளாய்வாண்டில் உடன்பட்டிருந்த பொறுப்புக்கள் ரூபா 787,632 தொகை கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக குறித்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பதிலளிப்பதற்கு போதியளவான பதவியணியினர் காணப்படாமை. | ஆண்டிற்குரிய ஏற்படுத்தப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான கூற்று முழுமையாகவும் சரியாகவும் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படவேண்டிய உறுதிப்படுத்தல்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றித் தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமாக ஆக்குவதற்கு தேவையான மாற்றங்களை செய்யவேண்டியிருந்தமையும், அந்த மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக கருத்துரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) உள்ளக கணக்காய்வு இலக்குகளை சரியான பிரகாரம் அமுல்படுத்துதற்காக ஆக்கபூர்வமான முறைமையொன்று உள்ளமைக்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும், அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் அந்த தேவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | பதவியணியினர் வழங்கப்படாமையின் காரணமாக உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது. | -மேற்படி- |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தூரநோக்கு மற்றும் பணிக்கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் கைத்தொழிலின் போட்டியுள்ள சர்வதேச நிலையமாக உருவாக்கும் வகையில் இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் கைத்தொழில் விடயங்களுக்குரிய கொள்கை வளங்கள், வழிகாட்டுதல் மூலம் உள்நாட்டு கைத்தொழிலை கட்டியெழுப்புவதற்காக சாதகமான வியாபார சூழலொன்றை உருவாக்கும் நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக பின்வரும் பணிப்பொறுப்புக்கள் அமைச்சினால் நிறைவேற்ற வேண்டியிருந்தது. | அமைச்சிற்கு கையளிக்கப்பட்டுள்ள கொள்கை வளங்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் செயல்முன்னேற்றம் செயலாற்றல் அறிக்கை காண்பிக்கப்பட்டுள்ள து. | புதிய இராஜாங்க அமைச்சின் கீழ் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான கொள்கைகள் மற்றும் திட்டங்களை தயாரித்து பணிப் பொறுப்புக்களை செயற்திறனாக நிறைவேற்றுதல் வேண்டும். |
| (அ) பெறுமதிகள் சேர்க்கப்படாத கனிய வளங்களை ஏற்றுமதி செய்வதை வரையறுத்து, பெறுமதி சேர்க்கப்பட்ட ஆகக் கூடிய ஏற்றுமதி வருமானம் ஒன்றை பெறக்கூடிய உற்பத்தியாக உருவாக்கி ஏற்றுமதி செய்தல். | | |

(ஆ) தற்போது நிலக் கீழ் மற்றும் கடலினுள் காணப்படுகின்ற கனிய வளங்களை நூதனமான அதிகதொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கண்டறிந்து நாட்டின் உற்பத்தி செயற்பாடுகளை வலுப்படுத்துவதற்கு ஈடுபடுத்துதல்.

(இ) இரத்திரனக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில் விடயங்களுக்குரிய கொள்கை வளங்களுக்கு உதவுதல்.

(ஈ) தேசிய பாதீட்டு முதலீட்டு வேலைத் திட்டங்களின் கீழ் உள்ள செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்.

(உ) அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை மற்றும் இரத்திரனக்கல் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் போன்ற நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகள் மற்றும் அதற்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல், பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீடு செய்தல்.

இந்த பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல் மற்றும் அதற்கான கொள்கைகள், திட்டங்களை தயாரித்தல் தொடர்பில் அமைச்சின் போதியளவான கவனம் இதுவரை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.2 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 2/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் செப்டம்பர் முதல் திசெம்பர் வரை செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரதியொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | செயல்நடவடிக்கைத் திட்டம் வருடம் ஆரம்பிப்பதற்கு முன்னர் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் அமுல்படுத்தப்படுதல் வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இனங்காணப்பட்ட போதிலும், அவற்றை அமுல்படுத்துதல் தொடர்பில் போதியளவான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை செயற்திறனாக அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 5. நல்லாளுகை

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு பிரிவொன்றை ஸ்தாபித்து உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதவியணியினர் வழங்கப்படாமையின் காரணமாக உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது. | தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு பிரிவொன்றை ஸ்தாபித்து உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை அமுல்படுத்துதல் வேண்டும். |

## 6. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 40 ஆக இருந்ததுடன், உள்ளபடியான பதவியணியினர் 06 ஆகும். அதன் பிரகாரம் வெற்றிடங்களின் எண்ணிக்கை 34 ஆகும். | பதவிகள், வெற்றிடங்களை பூர்த்தி செய்யுமாறு அரசாங்க சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது. ஆட்சேர்ப்பு நடைமுறைகள் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு அதன் திருத்தங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றது. | சேவை தேவையினை கவனத்தில் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட பதவியணிகளின் வெற்றிடங்களை பூர்த்தி செய்து இராஜாங்க அமைச்சின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |